
# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35.

வள்ளுவர் ஆண்டு 2007 ஆவணி 9 | ஷஃபான் 28 | (25-8-76) புதன் புத்தகம் 30 | இதழ் 36

(* 26 - 8 - 76 தமிழர் தளபதி நாவலர் அவர்களின் 49வது பிறந்ததினமாகும்)

## தலைவா வாழ்க!

உலகத்துப் பெருந்தலைவர் உவந்தமேதை
உயர்குணங்கள் பலபெற்றே உழைத்த ஏந்தல்!
தலைக்கனமே இல்லாத தலைமை பூண்டோன்;
தக்கவிதம் எவரிடமும் பழகுஞ் சான்றோன்;
கலக்கமதைக் கண்டறியா அஞ்சாநெஞ்சன்;
காலமெலாம் மக்களையே கருத்திற்
கொண்டோன்
அலைக்கழிந்த சமுதாய அமைப்பை மாற்றும்
ஆதர்ச ஒளியாகத்தானே ஆனோன்!

மாயிருளில் படுகுழியில் வீழ்ந்து, மீளும்
மார்க்கத்தை அறியாத தமிழ மக்கள்
ஆயிரங்கால் பூதமெனத் திரண்டொன்றுகி
அரசுகொளும் முரசறைந்து, ஆரணயத்துப்
பேயரசாம் சிங்களத்தைப் போர்த்து, தங்கள்
பேரரசை நிலைநாட்டிப் புதுமை வாழ்வின்
தாயகத்தைத் தம்நாட்டில், தழைக்கச்செய்யும்
தருமப் போர்த் தளபதியே! வாழி! வாழி!

—பொன்கை சிவபாலன்.

# தமிழர் தளபதி மீது வெறித் தாக்கு!

## அவரது கார் அடித்து நொருக்கப்பட்டது!

## கூட்டணி தொண்டர்கள் படுகாயம்!

## யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் காடைத்தனம்!

சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்க வேண்டிய பொலிசார், சிவில் உடையில் வந்து காரணமின்றிக் காடைத்தனத்தில் இறங்கினர்கள்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்ஈழ சுதந்திரப் போராட்டத்தின் தளபதியுமாகிய நாவலர் அமிர்தலிங்கத்தின் தலைமீது ஓங்கி அடித்தார்கள்; அவரது காரையும் வெறித்தனமாக அடித்து நொருக்கினர்கள்; திரு. அமிர்தலிங்கத்துடன் சென்றிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணியின் தொண்டர்களை பொல்லுகளாலும், கற்களாலும் அடித்து அவர்களது மண்டையைப் பிளந்தார்கள்; உடுவில் பா. உ. வி. தருமலிங்கத்தின் காரில் பறந்துகொண்டிருந்த உதயசூரியன் கொடியை பலவந்தமாக இழுத்துக் கிழித்தெறிந்ததுடன், காரிலிருந்த கொடிக்கம்பத்தையும் முறித்தார்கள். இத்தனை சம்பவங்களும் யாழ் பொலிஸ் அதிபரின் அலுவலகத்துக்கு முன்னல், அவர் உள்ளே கடமையிலீடுபட்டிருந்தபோதே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத நடவடிக்கைகளீடுபட்ட சில பொலிஸ் அதிகாரிகளுக்கெதிராக யாழ் பொலிஸ் மாஅதிபரிடம் திரு. அமிர்தலிங்கமும் மற்றவர்களும் முறைப்பாடு செய்யப்போனபோதே இத்தனை வெறியாட்டங்களும் நடைபெற்றது.

இத்தாக்குதலின்போது காயமடைந்தவர்களில் கொல்லங்கலட்டியை சேர்ந்த சிவமகாராஜா ஆறு இழை பிடிக்கப்

—2-ம் பக்கம் பார்க்க

● நாளை வியாழக்கிழமை

# தேசிய அரசுப் பேரவையில் கூட்டணி பா. உ. க்கள் அடையாள உண்ணுவிரதம்!

சிறையில் விடுதலை, அல்லது நீதி விசாரணை கோரி இன்று 21வது நாளாக சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கைக்கு ஆதரவாகவும், இவ்விளைஞர்களின் விஷயத்தில் மனிதத்தன்மைகூட அற்று அரசு கடைப்பிடிக்கும்அலட்சிய மனப்பான்மையைக் கண்டித்தும், தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்கள் அனைவரும் 26-8-76 வியாழக்கிழமை காலை 7 மணியிலிருந்து மாலை 7 மணி வரை தேசிய அரசுப் பேரவைக் கட்டடத்தில் ஒரு நாள் உண்ணுவிரதம் அனுட்டிப்பார்கள். இந்த எம். பீக்களின் உண்ணுவிரதத்தை மூதறிஞர் செல்வா தொடக்கிவைப்பார்.

இந்த முடிவு 22.8.76ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டணி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்த உண்ணுவிரதத்தில், உடுப்பிட்டி பா.உ. திரு. க. ஜெயக்கொடி, பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம், காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம், கிளிநொச்சி பா. உ. வி. ஆனந்தசங்கரி, உடுவில் பா.உ. வி. தர்மலிங்கம், வவுனியா பா.உ. சே. மாசெல்லத்தம்பு. திருகோணமலை பா.உ. பி. நேமிநாதன், மூதூர் பா.உ. அ. தங்கத்துரை, மட்டக்களப்பு பா. உ. திரு. செ. இராசதுரை,

——3-ம் பக்கம் பார்க்க

## ● பொலிஸ் அதிபரை இடமாற்றுக!
## ● பொலிசார் மீது ஒழுங்கு நடவடிக்கை!
## ● பூரண விசாரணை வேண்டும்!

### பிரதமருக்கு கூட்டணி பா.வு.க்கள் தந்தி!

யாழ்ப்பாணத்தில் சென்ற 21ம் திகதி பொலிஸ் அதிபர் அலுவலகத்தின் முன்னர் நடைபெற்றபொலிசாரின் வரம்புமீறிய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளின் எதிரொலியாக, யாழ் பொலிஸ் அதிபரை அங்கிருந்து உடனடியாக இடமாற்றம் செய்யும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்கள் பிரதமரைத் தந்தி

—3-ம் பக்கம் பார்க்க

## உண்ணுவிரதிகளின் பிரச்சினையை விவாதிக்க கூட்டணி பா. உ.க்கள் முயற்சி!

ஆகஸ்ட் 5ம் திகதியிலிருந்து இன்று 21வது நாளாக சிறைச்சாலையில் உண்ணுவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்களின் நிலைமைபற்றி ஒத்திவைப்பு பிரேரணையொன்றைக் கொண்டுவருவதன்மூலம் தேசிய அரசுப் பேரவையில் கூட்டணி பா. உ.க்கள் பிரச்சினை கிளப்பவிருக்கிறார்கள், 26-8-76ல் காலை 7 மணிக்கு தேசிய அரசுப் பேரவைக் கட்டடத்தில் உண்ணுவிரதம் தொடங்கும் இவர்கள், பிற்பகல் 2 மணிககு பேரவைதொடங்க மணி அடித்ததும், உள்ளே சென்று இளைஞர் பிரச்சினை சம்பந்தமாக கவனஈர்ப்பு பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு ஏனைய எதிர்க்கட்சி பா.உ.க்களின் உதவியை நாடுவார்கள். அன்றையதினம், சிறையிருக்கும் இளைஞர் பிரச்சினை, சுதந்திரன் அச்சகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலீஸ் காடைத்தனம் ஆகியவை பற்றி கூட்டணி பா.உ.க்கள் பேசவிருக்கிறார்கள்.

—2-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு தமிழீழத் தாயகத்தை அமைப்போம்!"

## நுவரெலியா பகுதியில் உதுமா லெவ்வை முழக்கம்!

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் ஒரு முட்டைக்குள் வாழும் இரு கருக்களைப்போன்றவர் கள். எப்படி அவையிரண்டையும் வெள்ளைக்கரு மஞ்சள் கரு என்று அழையாமல் முட்டையென்று அழைக்கின்றோமோ அதேபோன்றே தங்களுக்குள்ளே தனித்துவத்தைப் பேணிப்பாதுகாத்துக்கொண்டு தமிழ் என்னும் தாய்மொழியான ஓட்டினுல் ஒன்றுசேர்க்கப்பட்டு, தமிழ்த்தேசிய இனம் என்று அழைக்கப்படுகிறோம். ஆளும் தேசிய இனம் நம்இரு இனங்களையும் ஒன்று சேர்த்திருக்கின்ற தேசியம் எனும் ஓட்டை உடைத்து இரண்டு கருக்களையும் அடித்துப் பிசைந்து 'ஓம்லட்' செய்து விழுங்கிட நினைக்கின்றது. இந்த நிலையில் இருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள தமிழ், முஸ்லிம்களாகிய தமிழ்தேசிய இனத்தவர்கள் ஒன்று சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின்போராட்டங்களிலும் பங்குபற்றவேண்டும்."

"தமிழர் விடுதலைக் கூட்டணி மலையகத்தில் வாழும் தமிழர்களை ஒருபோதும் மறந்ததில்லை. நாம் தமிழரசுக் கட்சியாக இயங்கிய போதும் எமது கொள்கைகளில் ஒன்றாக, மலையக மக்களின் பிரஜா உரிமைக்காக போராடி வந்திருக்கின்றோம்."

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் தமிழரசுக்கட்சி அவர்களை மதித்து அவர்களது உரிமைக்காகவும் போராடி வந்திருக்கின்றது. இந்த நாட்டின் அரசியல் சட்டமோ தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் உரிமைகளைத்தோண்டிப் புதைக்க வழிசெய் திருக்கின்றது. எனவே முஸ்லிம் பெருமக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஓர்அங்கமான அகில இலங்கை இஸ்லாமிய இணைப்புப்பேரவையின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து தமிழ்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடவேண்டும்.

"நாங்கள் கவரிமான் சாதி நாய்போல் எசமான் அடிகளை நக்கோம், எங்கேதேடி உதை[illegible] செருக்களம் வாடா" என்ற என் இனிய நண்பன் காசி ஆனந்தன் அழைப்பிற்கிணங்க மலையகம் வாழ் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டுவருக.

7-8-76 முதல் 11-8-76 வரை ஐந்து நாட்கள், த. வி. கூ. ஒரு அங்கமான அகில இலங்கை இஸ்லாமியர் இணைப்புப் பேரவைக்கிளைகளை நுவரேலியாத் தொகுதியில் அமைப்பு முயற்சியில் ஈடுபட்ட ஜனுப் உதுமா லெப்பை அங்கு நடைபெற்ற கூட்டங்களில் மேற்கண்டவாறு அறைகூவல் விடுத்தார்.

மேலும் அவர்தம் உரையில் யாழ்ப்பாணம் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் சம்பவங்கள் பற்றியும், அண்மையில் புத்தளத்தில் நடைபெற்ற அசப்பாவிதங்கள் பற்றியும் அங்குவாழ் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விளக்கி உரைத்துள்ளார். அவரோடு கூட கிளை அமைப்பு வேலைகளில் ஜனுப். ஏ. கே. வாஹீட் அவர்களும் பங்குகொண்டார்.

8-8-76ல் சில்மியாபுரம் பொறகஸ்சில் நடைபெற்ற ஜனும் வாப்பு லெப்பையின் தலைமையில் நடைபெற்றது. அவர் தம் தலைமையுரையில் மலையகத்தில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் பெரும்பான்மை இனத்தால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். வர்த்தக ரீதியில் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைய அரசால் பாரபட்சமானமுறையில் விதை, உரம், மண்வெட்டி போன்றவை வழங்கப்படுவதால் மலையகப்பகுதியில் கமம் செய்யும் தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது பெற்றோரை எவ்வாறாக நாம் கௌரவிக்கின்றோமோ அதுபோன்றே எமது தாய்மொழியாம் தமிழையும் நாம் கௌரவித்துப் பாதுகாக்க வேண்டும். ஆகவே முஸ்லிம் மக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து உரிமைகளுக்காகப் போராடவேண்டும்

என்று குறிப்பிட்டார்.

அடுத்து ஏ. எம். புவாத், எம். எம். சமீம், ஏ. எஸ். ஆர். ரஞ்சன், ஏ. தம்பிராஜா, ரட்ணசிங்கம், ஜனுப் உதுமாலெப்பை ஆகியோரும் உணர்ச்சிமிக்க உரைகளை நிகழ்த்தினர்.

சொற்பொழிவுகளை அடுத்து சில்மியாபுரம் பொறகஸ் அ. இ. இ. இ. பேரவைக்கிளை அமைக்கப்பட்டது.

9-8-76ல் பொரளந்தை நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமைதாங்கிய ஜனுப். வாப்புலெப்பை தன் உரையில் "விஜயன் பரம்பரையினர் தமிழ்ப்பேசும் மக்களைக் கள்ளத்தோணிகள் என்று அழைக்கின்றனர். என்றும் மலையகத் தோட்டங்களில் உள்ள புற்களுக்கு கொடுக்கும் மரியாதைகூட இங்குள்ள தமிழ்பேசும் மக்களுக்கு சிங்கள அரசு கொடுக்க மறுக்கின்றது. இந்நிலைகண்டு இனியும் பொறுத்திருக்கமுடியாது. எமது சுதந்திரத்தையும், உரிமையையும் பெற ஒரேவழி த. வி. கூ. யுடன் சேர்ந்து போராடுவதுதான் அந்த முடிவின் காரணமாகவே த. வி. கூட்டணி தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டதன் பயனாகவே த. வி. கூ. செயலதிபர் நாவலர் எமது தானைத்தளபதி அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் அ. இ. இ. இ. பேரவையின் தலைவரும், த. வி. கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான ஜனுப். உதுமா லெப்பை அவர்களை அனுப்பியுள்ளார். குறிப்பாக இளைஞர்களை எமது இயக்கத்தில் சேர்ந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்" என்றும் கூறினர்.

அடுத்து எம். ஆர். ரஞ்சன், செல்வி வீ. சித்திரா, தம்பிராஜா, ஜனுப். உதுமாலெப்பை ஆகியோரும் உரை நிகழ்த்தினர். கூட்டம் முடிவில் நுவரேலியாத் தொகுதி முழுவதும் கிளை அமைப்பு வேலைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான. அமைப்புக் குழுவொன்றும் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

ஜனுப். உதுமாலெப்பை தனது இந்த கிளையமைப்புப் பயணத்தின் பொழுது ஹாவேலிய, கந்தப்பொளை இன்னும் பல இடங்களிலும் கிளை அமைப்புவேலைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். நுவரெலியாத்தொகுதியின் த. வி. கூட்டணியின் அமைப்புக் குழுவும், ஜனுப் வாப்புலெப்பையும் இணைந்து இயங்கி இரண்டு மாதகால எல்லைக்குள் கிராமந்தோறும் பல கிளைகளை நிறுவியதன் பின் த. வி. கூ. தலைவர்கள் எல்லோரும் கலந்துகொள்ளக் கூடியவிதமாக நுவரெலியாத்தொகுதியில் மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யவுள்ளனர்.

மலையகத்தில் திரு. ஈழவேந்தன் திரு. கோவை மகேசன் ஆகியோரின் எழுத்தோவியங்களில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுவதாகவும் அவர்களை நேரில் காணவும் உரையாடவும் விரும்புகிறார்கள் என்றும் சுதந்திரன், சுடர் ஆகிய பத்திரிகைகள் அப்பகுதிகளில் கிடைப்பதில்லையென்றும் அத்தோடு சுதந்திரன்வெளியீடு, இன்னும் காசியானந்தனின் நூல்கள் தமக்குக் கிடைப்பதற்கு ஒழுங்குகள் செய்யும்படியும் ஜனுப் உதுமாலெப்வையை மலையக மக்கள் கேட்டுள்ளனர்.

ஒருகாலத்தில் பெருமளவு முஸ்லிம்கள் வாழ்ந்த கிராமங்கள் இன்று தனிச்சிங்களமயமாக மாறிவருவதாக அங்குவாழ் இஸ்லாமியத் தமிழர்கள் கவலைப்படுவதாக உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

---

### தமிழர் தளபதி...

-1-ம்பக்கத் தொடர்

பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையிலிருந்து வருகிறார்

இச்சம்பவங்கள் பற்றி சொல்லப்படுவதாவது:—

கடந்த 12ம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் சட்டமறுப்பிலீடுபட்டு இரு வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இளைஞர்களான ஐ. திருஞானம், விசுவமடு, ஜெயபாலன், ஞா. ஞானராசா, க. புஷ்பகாந்தன், ச. துரைராசசிங்கம் ஆகிய ஐந்து தொண்டர்களும் 21-8-76 சனிக்கிழமை யாழ் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தார்கள். இந்த இளைஞர்களை சிறைவாசலில் சென்று வரவேற்று அழைத்து வருவதற்காக இரண்டு கார்களில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், சே. மா. செல்லத்தம்பு பா. உ., வி. தருமலிங்கம் பா. உ., சட்டத்தரணிகள் இ. விசுவநாதன், வி. யோகேஸ்வரன் ஆகியோரும் கூட்டணி இளைஞர்கள் சிலரும் யாழ் கோட்டைக்கு சென்றிருக்கிறார்கள். இவர்களை கோட்டைக்குள் நுழைய அனுமதிக்கமுடியாது என்று அங்கிருந்த பொலிசார் தடுத்தனர். பொலிசார் தம்மைத் தடுப்பதுபற்றி பொலிஸ் மாஅதிபருக்கு முறைப்பாடு செய்யும் பொருட்டு அங்கிருந்து அவர்கள் தமது கார்களில் திரும்பியபோது கோட்டையின் உட்புறத்திலிருந்து கார்களை நோக்கி சரமாரியாக கற்கள் வீசப்பட்டன.

இதையடுத்து அங்கிருந்த பொலிஸ் சார்ஜன்டிடம் எங்கள் நாட்டில் நடமாடவும் எங்களுக்கு உரிமையில்லையா என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டபோது, "இது உங்கள் நாடு இல்லை — இது எங்கள் (சிங்களவர்களின்) நாடு" என்று அவன் வெறித்தனயாக கூறினனும்.

பொலிஸ் அதிபரிடம் இவற்றை முறையிடும் பொருட்டு தலைவர்கள் தமது கார்களில் வரும் போது வழியில் "பொலிஸ் பராக்கில்" இருந்து வெளியே வந்த சாரம் அணிந்திருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் பொல்லுகள் தடிகளுடன் பாய்ந்துவந்து தலைவர்களின் கார்களை தாக்கினர். இவர்கள் சப்இன்ஸ்பெக்டர் சலாங்கொடையும் சார்ஜன்ட் மேஜர் ஹலாகக்கோனுமேயென்று அவர்களை நேரடியாக கவனித்த வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு தெரிவித்தார்.

இதையடுத்து தலைவர்கள் தமது காரில் பொலிஸ் அதிபரின் அலுவலகத்தினுள்ளே நுழைந்தபோது மேற் குறிப்பிட்ட இரு பொலிஸ் அதிகாரிகளும் றிசேவ் பொலிசார் தங்கியிருந்த துரையப்பா ஸ்டேடியத்தினுள் நுழைவதைக்கண்டனர்.

உள்ளே சென்று பொலிஸ் அதிகாரிகளின் சட்ட விரோதச்செயல்கள்பற்றி திரு. அமிர்தலிங்கம் பொலிஸ் அதிபரிடம் முறையிட்டு உடன் நடவடிக்கையெடுக்கும்படி வற்புறுத்தியபோது —அவர் உடன் நடவடிக்கையெடுக்காமல் முறைப்பாடு கொடுக்கும்படி கூறியதாகவும், இதன்பின் திரு. அமிர்தலிங்கம் முறைப்பாடு கொடுத்ததாகவும் அறியப்படுகிறது.

இச்சமயம் திரு. வி. தருமலிங்கம் பா. உ. தம்முடைய காரை பொலிஸ் அதிபர் அலுவலகத்தின் முன்நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தார். அவர் உள்ளே நுழைந்ததும் ஸ்டேடியம் பக்கத்திலிருந்து அங்கு ஓடிவந்த சிவில் உடை அணிந்த காடையர்கள், திரு. தர்மலிங்கத்தின் காரில் பறந்துகொண்டிருந்த உதயசூரியன் கொடியை இழுத்து கிழித்ததுடன் கொடிக்கம்பத்தையும் முறிக்கமுயற்சித்தனர்.

இதையறிந்த திரு. தர்மலிங்கம் வெளியே வந்து பார்த்துவிட்டு, உள்ளே ஓடிச்சென்று இதுபற்றி உடன்நடவடிக்கை யெடுக்கும்படி பொலிஸ் அதிபரிடம் வற்புறுத்தினர். அப்போதும் பொலிஸ் அதிபர் திரு. தர்மலிங்கத்திடம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்கும்படி கூறிவிட்டு இருந்தாரே தவிர உடன் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லையாம்.

திரு. தர்மலிங்கமும், அமிர்தலிங்கமும் உள்ளே வாக்கு மூலம் கொடுத்துக் கொண்டிருந்தவேளையில் — துரையப்பா ஸ்டேடியத்தில் இருந்த நூற்றுக்கு மேற்பட்ட சிவில் உடை அணிந்த றிசேவ் பொலிசார், தடிகள், பொல்லுகள் சகிதம் திடீரென பாய்ந்து வந்து, திரு. அமிர்தலிங்கத்தின் காரை உதைத்து அடித்து நொருக்கினர்; அச்சமயம் இந்த வெறியாட்டத்தை நேரடியாகப் பார்த்தபடி காருக்குள் திருமதி அமிர்தலிங்கம் இருந்தார்.

காரை அடித்து நொருக்கிய பொலிஸ் காடையர்கள் அங்கு நின்ற கூட்டணி இளைஞர்களையும் மிருகத்தனமாக தாக்கினார்கள். இதன் காரணமாக சிவமகாராசா, கணேஷ், நாதன், முன்னுள், மாநகர சபை உறுப்பினர் தம்பு கந்தையா, சிவதாசன் ஆகியோர் கடும்தாக்குதலுக்குள்ளாகினர். மண்டை பிளந்த நிலையில் சிவமகராசா யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு ஆறு இழை போடப்பட்டது.

தமது கார் தாக்கப்படுவதையும், இளைஞர்கள் தாக்கப்படுவதையும் கேள்வியுற்ற திரு. அமிர்தலிங்கம் பொலிஸ் நிலையத்தின் உள்ளேயிருந்து வெளியேவந்த அதே நேரத்தில், ஏ. எஸ். பி. ஒருவர் அங்குவந்து காடைத்தனம் புரிந்த பொலிசாரை விரட்டிக் கொண்டிருந்தார். ஏ. எஸ். பி. யால் விரட்டப்பட்டு, அங்கிருந்து ஓடிக்கொண்டிருந்தபோது, ஒரு பொலிஸ்காரன் திரு. அமிர்தலிங்கத்தின் மண்டையில் ஓங்கி அடித்துவிட்டு ஓடியிருக்கிறான்.

இச்சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட இளைஞர் ஒருவர்— தானைத்தளபதி மீதே இப்படி வெறித்தனமாக ஒருவன் கைவைத்துவிட்டபின்னர் இனியும் நாம் எப்படி சகித்துக்கொள்ள முடியும்? சிவபிரானின் மேனியில் பட்ட அடி சகல உயிர்களிலும் பட்டதுபோல, தமிழினத்தின் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் மீது விழுந்த அடி அனைத்துத் தமிழன் மீதும் விழுந்த அடியாகும் என்று குறிப்பிட்டார்.

---

### உண்ணாவிரதிகளின் ...

—1-ம் பக்கத் தொடர்

கூட்டுச்சேரா மாநாட்டின் பின்னர், 26-8-76 வியாழக்கிழமை பிற்பகல்தா[illegible] முதன்முதலாக தேசிய [illegible] சுப்பேரவை கூடுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடாபி

## அறை கூவல்!

"நாடு இழந்து, அரசியல் உரிமை இழந்து அடிமைகளாகவும் நடைப்பிணங்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தின் எந்த மூலை முடுக்கிலும் வாழும் மக்களுக்கும் எனது நாடு ஆத்மார்த்த ரீதியிலும் மற்ற விதமாகவும் உதவிகளைச் செய்யும்"

—லிபியா ஜனதிபதி
கேணல் கடாபி

(வீரகேசரிக்கு அளித்த பேட்டியில் கூறியது)

# திருமலையில் கைது!

திருமலையிலிருந்து கொழும்புக்கு புறப்படவிருந்த கொழும்பு புகையிரதம் (17-8-76, இரவு 7-50) திடீரெனத் தீப்பற்றி எரிந்தது. உடனே அணைக்கப்பட்டது — இது தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் த. இ. பேரவையை சேர்ந்த திரு. இராசரெத்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## தேசிய அரசுப் பேர...

—1-ம் பக்கத் தொடர்

கோப்பாய் பா.உ. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோர்பங்கு பற்றுவார்கள். சாவகச்சேரி பா.உ. இதற்குள் நாடு திரும்பிவிடும்பட்சத்தில், அவரும் பங்கேற்டார். உண்ணுவிரதத்தை தந்தை செல்வா தொடக்கிவைக்கிறார்.

கூட்டணி பா. உ.க்கள் தமிழ் தேசிய உடையுடன் உதயசூரியன் சால்வையணிந்து இந்த உண்ணுவிரதத்தில் பங்கேற்கவிருக்கிறார்கள்.

## பொலிஸ் அதிபரை...

—1-ம் பக்கத் தொடர்

மூலம் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டணிப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை யடுத்தே இத்தந்தி பிரதமருக்கு கூட்டணி பா. உ.க்களால் அனுப்பிவைக்கப்பட்டது. சுமார் ஒன்றரை பக்கங்களைகொண்ட இத்தந்தியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு பொலிஸ் அதிபரே பொறுப்பு எனக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை யெடுக்கப்படுவதுடன் இது சம்பந்தமாக பூரண விசாரணையொன்றை நடத்துவதற்கு ஓர் உயர்மட்ட விசாரணைக்குழுவை நிறுவுமாறும் கூட்டணி பா. உ.க்கள் பிரதமரிடம் கோரியுள்ளனர்.

இது இப்படியிருக்க, இச்சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸ் அதிபர் மேற்கொண்ட விசாரணையின் தொடர்பாக ரணசிங்கா என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் உடனடியாக தற்காலிக வேலை நீக்கம்செய்யப்பட்டிருக்கிறார்.மற்றோர் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரான சலாங்கொடவுக்கு கட்டாய லீவு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறதாகத்தெரிகிறது.

## விடுதலை!

விசாரணைக்காக சி. ஐ. டி. யினரால் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளைத் தலைவர் ஆ. ரகுபதி பாலசிறீதரன், பொருளாளர் க. உமாமகேஸ்வரன், சுதந்திரன் அச்சகத்தைச் சேர்ந்த மூ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் 23-8-76 நண்பகல் 12 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

## கிறித்தவ ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகள்!

நாடெங்குமுள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறையில் உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்காக பிரார்த்தித்தும், தமிழர் தலைவர் தந்தை செல்வாவுக்கு வலிமையையும் நீடித்த ஆயுளை வேண்டியும் தமிழினத்திற்கு நீதி வழங்கும்படி கோரியும் விசேட பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.புறக்கோட்டை புனிதபிலிப்நேரியார்ஆலயத்திலும், தெகிவளையிலுள்ள பெந்தகோஸ்த மிசனிலும் நாள்தோறும் ஒவ்வொரு பிரார்த்தனை சமயத்திலும் மேற்கண்ட நோக்கங்களுக்காக பிரார்த்தனை நடைபெற்றுவருவதாக அறியப்படுகிறது.

## தீ மிதிப்பு

சிறையில் உண்ணுவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு அனுதாபம் காட்டும் வகையில் 9-8-76ல் நடந்த உகந்தமலை முருகனின் தீர்த்தத்தன்று ச. நல்லதம்பி, ச. பட்சம், க. இராசகுலம், க. சதாசிவம், அமிர்தலிங்கம், நா. சத்தியசீலன், ச. சிங்கராசா ஆகிய தமிழ் இளைஞர்கள் தீமிதிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## தமிழர் கூட்டணி நடவடிக்கைகளுக்கு தமிழாசிரியர்கள் ஆதரவு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஆதரவு அளிப்பது என்ற தீர்மானம் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க யாழ்ப்பாணக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலைக் கிளையும் இதேபோன்ற தீர்மானத்தை ஏற்கெனவே நிறைவேற்றியிருந்தது தெரிந்ததே.

## இன்றைய கருத்தரங்கு

கொழும்பில் இன்று (25-8-76) மாலை 6 மணிக்கு தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில், 'இரும்பு மனிதன் பற்றிய சில எதிரொலிகள்' எனும் தலைப்பில் திரு. கரிகாலனும், 'தமிழர் விடுதலைப் போராட்டத்தில் புதிய திருப்பம்' எனும் தலைப்பில் மேர்கண்டைல் நிறுவனத்தின் முகாமைப்பணிப்பாளர் திரு. கே. விக்னராஜாவும் உரையாற்றுவார்கள்.

# அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் 28-ம் திகதி

# நாடுமுழுவதும் உண்ணுவிரதம்!

சிறையில் இறக்கும்வரை உண்ணுவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு அனுதாபம் தெரிவித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வருகிற 28ம் திகதி (28-8-76) சனிக்கிழமை நாடு முழுவதும் ஒரு நாள் உண்ணுவிரதத்தை பரந்த அடிப்படையில் நடாத்தவுள்ளது. இந்த உண்ணுவிரதத்தில் எழுதுவினைஞர் சங்கத்தின் உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களும் தொண்டர்களும் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது.

தலைவர் திரு. க. சோதிலிங்கத்தின் தலைமையில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி உண்ணுவிரத முடிவு ஒருமனதுடன் மேற்கொள்ளப்பட்டது. மொழி வழித்தொழிற் சங்கங்களின் முன்னோடியான, சுமார் மூவாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் இந்த முடிவு தமிழ் தொழிலாளர் வர்க்க முழுவதற்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இனவிடுதலைப் போரில் தமிழ் மக்களுடன் தமிழ் ஊழியர்களும் ஒன்றுசேர்ந்தியங்குவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

உண்ணுவிரதம் கொழும்பில் வெள்ளவத்தை சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் ஆலயத்திலும், யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும், மன்னாரில் பரிசுத்த செபஸ்தியார் றோ. க. தேவாலயத்திலும், மட்டக்களப்பில் புளியந்தீவு ஆணைப்பந்தி பிள்ளையார் கோவிலிலும், கண்டியில் கட்டுக்கலை பிள்ளையார் கோவிலிலும், திருமலையில் காளியம்மன் கோவிலிலும், வவுனியாவில் கந்தசுவாமி கோவிலிலும், கல்முனையில் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்திலும் ஏககாலத்தில் நடைபெறும்.நாடெங்கிலும் சுமார் 4000 பேர் இந்நிகழ்ச்சியில்கலந்துகொண்டு சிறையில் உண்ணுவிரதத்தவம் மேற்கொண்டிருக்கும் இளந்தமிழ் செம்மல்களுக்காகப்பிரார்த்தனை நடாத்துவார்கள்.

கொழும்பில் நடைபெறும் உண்ணுவிரத நிகழ்ச்சியில் மூதறிஞர் தந்தை செல்வாவும் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனைய இடங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் பலரும் அந்தந்த நகரங்களில் நடைபெறும் உண்ணுவிரதத்தில் பங்கு பற்றுவார்கள்.

உண்ணுவிரதம் பற்றிய சகல ஒழுங்குகளையும் துரிதமாக மேற்கொள்ளுமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் கிளைச் சங்கங்களையும் பொதுச்செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் ஓர் சுற்றறிக்கை மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்

# மட்டுநகரில் பொலிசார் அட்டுழியம்

சமீபத்தில் மட்டக்களப்புப் பகுதியில் மஞ்சந்தொடுவாயில் இடம்பெற்ற பஸ் தீவைப்பு சம்பந்தமாக பொலிஸ் நாய்களின் உதவியோடு மூவர் பிடிப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. நிலைமை அவ்விதமிருக்க, மட்டக்களப்பு பொலிஸ் பகுதியினரும், துப்பறியும் பிரிவினரும் அங்குள்ள அப்பாவி இளைஞர்கள் மீது தீவைப்புச் சம்பந்தமாக குற்றங்களைச் சுமத்தப் பார்க்கின்றார்கள். அகிம்சை வழியில் போராடிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த சில இளைஞர்களை உள்ளே தள்ளுவதற்கு முயற்சிகள் எடுக்கின்றார்களாம். இதன் முன்னோடியாக, செங்கலடியைச் சேர்ந்த ராஜ்மோகன் என்பவரைச் சந்தேகத்தின் பேரில் தேடுவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் வீட்டிற்குச் சென்று தாய், சகோதரி ஆகியோரைத் துன்புறுத்தினராம். 17-8-76 நள்ளிரவு 2 மணியளவில் அவர்கள் வீட்டுக்குச் சென்று ராஜ்மோகனின் தாயார் திருமதி சின்னத்துரையையும் இளம் சகோதரியுட்பட இன்னுமொரு சகோதரரையும் கைதுசெய்து மட்டுநகர் பொலிஸ் நிலையம் கொண்டு வந்தார்களாம்.

பொலிஸ் நிலையத்தில் வைத்து தூஷண வார்த்தைகளால் ஏசியது மாத்திரமன்றி புஸ்பராணிக்குச் செய்ததுபோல் செய்வோம் என்றும் பயமுறுத்தினார்களாம். 18ம் திகதி மாலை காலில் காயத்தோடு இருந்த ராஜ்மோகனையும் திரு. இரா. பரமதேவாவையும் கைதுசெய்துகொண்டு வந்தார்களாம். [illegible] விபத்தினால் காற்காயத்தோடு இருந்ததாகச் சொல்லப்படும் ராஜ்மோகன்மீது பலாத்காரத்தைப் பாவித்து அவரைக் குற்றவாளியாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்களாம். இரண்டு நாட்களாக வைத்தியசாலைக்கும் அனுப்பாது வைத்திருந்து சித்திரவதைப்படுத்தினார்கள் என்று தெரியவருகின்றது.

அதுமாத்திரமன்றி ராஜ்மோகனின் தாயார் சகோதரி சகோதரன் ஆகியோரிடம் பலவந்தமாக தங்களுக்குச் சாதகமான முறையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் தெரியவருகின்றது.



# பிறந்த தின வாழ்த்து

வேளை வந்தது; வீரம் பிறந்தது
வேங்கை மைந்தர்கள் கூடினோம்
நாளை நமதே; நாளை நமதே
காண்போம் ஈழத் தமிழகம்!
சூழ நிற்பவர் கேள்வி கேட்கிறார்
சோர்வதோ; வீரம் வீழ்வதோ?
வீர "சுதந்திரன்" வேண்டி நின்றனன்
வாருமே செந் தமிழர்காள்
ஆண்டு ஒன்றினில் அடி எடுத்திடும்
அரும்பிடும் அன்பு மழலையின்; எம்
வீர உணர்வுகள் விளைந்து நிற்கவே
வாழ்த்துவீர்! ஆசி கூறுவீர்!

13-8-76 பிறந்ததினம்

—இராசம்மா சண்முகநாதன்
சிவகுரு சண்முகநாதன் (பெற்றோர்)
சாவகச்சேரி


## முக்கிய அறிவித்தல்

"மில்க்வைற்" உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலைகள் கூட்டப்படவில்லை என்பதைப் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

## சிவகுமாரன் பிறந்த நாள் விழா

தியாகி சிவகுமாரனின் பிறந்ததினத்தை முன்னிட்டு எதிர்வரும் 26-8-76 வியாழக்கிழமை மாலே 5 மணிக்கு உரும்பிராய் சந்திக்கு அருகாமையிலுள்ள தியாகி சிவகுமாரனின் சிலேயருகில் விழா கொண்டாடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், மு. ஆலாலசுந்தரம், திருமதி மங்கையாக்கரசி, அமிர்தலிங்கம், திரு. ஆர். விஸ்வநாதன், திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனும் மற்றும் பலரும் உரையாற்றுவா..

# "தலேவர்கள் தங்களே அர்ப்பணித்தால் மட்டுமே தமிழ் மக்கள் எழுச்சி பெறுவார்கள்!"

## கொழும்பு வரவேற்பில் திரு. ஆனந்தசங்கரி!

"விடுதலே இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் தலேவர்கள் தங்களே முழுமையாக இயக்கத்துக்கு அர்ப்பணிக்கவேண்டும்; அப்போதுதான் மக்களுக்கு எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்படும். நான் இரண்டு வாரம் சிறைக்கு சென்றதால் எனது தொகுதி மக்களிடையே தாஞக விடுதலே வேகம் பொங்கியுள்ளது. நம்மை நாம் அர்ப்பணித்தால் மட்டுமே இயக்கம் முன்னேறும்!"

—இவ்வாறு சிறைமீண்ட கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரிக்கு மூதறிஞர் தந்தை செல்வாவின் இல்லத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் திரு. சங்கரி பேசுகையில் குறிப்பிட்டார்.

கடந்த 12-8-76ல் கிளிநொச்சி நீதிமன்றத்தில் துண்டுப் பிரசுரம் விநியோகித்ததற்காக கைதுசெய்யப்பட்டு, ரூபா 50.00 அபராதம் கட்டமறுத்து, இருவாரச் சிறைத்தண்டனையை கொழும்பிலுள்ள றிமாண்ட் சிறையில் கழித்த திரு. ஆனந்தசங்கரி 21-8-76 அதிகாலே விடுதலே செய்யப்பட்டார். திரு. சங்கரியை சிறைச்சாலே அதிகாரிகள் அதிகாலே 5 மணிக்கே ஜீப்பில் ஏற்றிவந்து திரு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில் விட்டுச்சென்றனர்.

இதனுல் ஆனந்தசங்கரியை சிறைச்சாலே வாசலில் வைத்து வரவேற்பதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் கையில் மாலேகளுடன் சென்று காத்திருந்து முடிவில் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

திரு. ஆனந்தசங்கரி சிறையிலிருந்து வெளியே வந்ததும், உடனடியாக த. வி. கூ. தலேவர் மூதறிஞர் தந்தை செல்வாவின் இல்லத்துக்கு விரைந்துவந்து தந்தையிடம் ஆசீர்வாதம் பெற்ருர். தந்தை செல்வா மாலே சூட்டி திரு. ஆனந்தசங்கரியை அன்புடன் வரவேற்ருர்.

தந்தையின் இல்லத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் திரு. சங்கரியின் தியாகத்தைப் பாராட்டித் தந்தை செல்வா, அ. எ. வி. சங்கத் தலேவர் திரு. சோதிலிங்கம், தமிழர் விடுதலேக் கூட்டணித் துணைத்தலேவர் ஜேச். டீ. வாஸ், ஆவரங்கால் சின்னத்துரை, உடுப்பிட்டி சிவா ஆகியோர் பேசினர். திரு. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:-

"நான் எந்த வித தியாகத்துக்கும் தயாராக இருக்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து சிறைச்சாலே யுடையுடனேயே இங்கு கொண்டு வரப்பட்டேன். இங்கு சிறையிலும் அதே சிறையுடையுடனேயே இருந்தேன். காரணம் நாம் இவ்வாறு நடந்து காட்டுவதன் மூலம் நமது இளேஞர்களுக்கு மனப்பக்குவத்தை ஏற்படுத்தவேண்டுமென்பது தான். சிறையிலும் சிறையில் தரப்பட்ட உணவையே உண்டேன். விசேட உணவை நான் நாடவில்லே. ஏறத்தாழ ஒரு நாளேக்கு 15 மணி நேரம் சிறைக்கூடத்துக்குள் பூட்டப்பட்டு இருந்தேன்.

"எந்தவித நிலேக்கும் நாம் ஆளாக்கப்பட்டாலும், அதையெல்லாம் தாங்கும் மனப்பக்குவத்தை நாம் பெற்ருல்தான் விடுதலே இயக்கத்திலே விரைந்து முன்னேற முடியும்.

"எனது அறைக்கு அருகில் சிறையிலே பயங்கரமான ஐ. ஆர். சி.யான 'சீனு' என்பவன் வைக்கப்பட்டிருந்தான். அவனே ஏதோ சுகவீனம் காரணமாக சிறைச்சாலே ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்ருர்கள். சிறை ஆஸ்பத்திரிக்கு சென்ற அவன், அங்கு சாகும்வரை உண்ணுவிரதத்திலீடுபட்டிருக்கும் நமது இளேஞர்களின் பரிதாபமான கோலத்தைப் பார்த்து வந்து கண் கலங்கியபடி என்னிடம் கூறினுன். பயங்கரமானவன் என்று வர்ணிக்கப்படும் 'சீனுவுக்கே' நமது இளேஞர்களின் நிலே கண்களில் நீரை வருவிக்கிறது; ஆனல் ஒரு தாயான அம்மையாரோ இரும்புமனத்துடன் அவர்களே இன்னும் விடுதலேசெய்யாமலிருக்கிருர். என்ன நேரினும் நாம் தொடர்ந்து போராடுவோம்"


### அ. எ. வி. சங்கம் வரவேற்பு

சிறைமீண்ட திரு. ஆனந்தசங்கரிக்கு சென்ற 21-8-76 காலே 11-30 மணிக்கு அரசாங்க எழுதுவினேஞர் சங்கத்தின் புதிய ஆட்சிக்குழு தனது பணி மனேயில் ஒரு தேனீர் விருந்தளித்துப் பாராட்டியது.

### செக்கடித் தெருவில் வரவேற்பு!

தமிழர் விடுதலேக் கூட்டணி ஆதரவாளர்களால் கொழும்பு செக்கடித்தெரு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்துக்கு அருகில் ஓர் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது. ஐந்துலாம்படிச் சந்தியிலிருந்து திரு. ஆனந்தசங்கரி கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். தெருவை மறித்து மக்கள் நிற்க கூட்டம் நடைபெற்றது. பொலிஸ் அனுமதி பெருமல் சட்டத்தைமீறி நடைபெற்ற இந்த ஊர்வலத்தில ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் திரு. ஆனந்தசங்கரி, தா. திருநாவுக்கரசு, சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் உட்பட பலர் பேசினுர்கள். திரு. குமார் பொன்னம்பலமும் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

22-8.76 அதிகாலே யாழ் தேவி மூலம் தனது தொகுதிக்குப்புறப்பட்ட திரு. ஆனந்தசங்கரியை கோட்டை ரயில் நிலேயத்தில்வைத்து ஏராளமான கூட்டணித் தொண்டர்கள் மாலே சூட்டி அனுப்பிவைத்தனர். வவுனியா ரயில் நிலேயத்திலிருந்து கிளிநொச்சி வரை திரு. சங்கரிக்கு பெருத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. கிளிநொச்சி ரயில் நிலேயத்தில் வைத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் திரு. சங்கரிக்கு மலர் மாலே சூட்டி ஊர்வலமாக அழைதது சென்றனர்.



சட்டமறுப்பிலீடுபட்டு இரண்டுவாரம் சிறைத்தண்டனே அனுபவித்த பின்னர் விடுதலேயாகி வெளியே வந்த திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. வுக்கு மூதறிஞர் செல்வாவும் உடுப்பிட்டி சிவாவும் மாலே சூடி வரவேற்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

## பிரதமருக்கு செல்வா தந்தி!

"எனது கட்சியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும் இன்னும் பலரும் எதுவித தூண்டுதல் நிகழ்ச்சிகளுமற்ற நிலேயில் காரணமின்றி யாழ் பொலீஸ் நிலேயத்தைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரிகளினுல் தாக்கப்பட்டதாக எனக்கு செய்திகிடைத்துள்ளது. சில பொலீஸ் அதிகாரிகளின் சட்டவிரோதச் செயல்பற்றி பொலீஸ் அதிபருக்கு முறைப்பாடு செய்யப்போன இடத்திலேயே இவர்கள் இப்படி தாக்கப்பட்டிருக்கிருர்கள். எனது தொகுதியைச் சேர்ந்த திரு. சிவமகாராஜா கடுமையான காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிருர். திரு. அமிர்தலிங்கத்தின் கார் பலாத்காரமாக அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது. இதில் நீங்கள் தலேயிட்டு இதுபற்றி பாகுபாடற்ற விசாரணேயொன்றை நடத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

—யாழ் சம்பவங்கள் பற்றிய செய்தி கிடைத்ததும் தந்தை செல்வா பிரதமருக்கு மேற்கண்ட தந்தியை அனுப்பிவைத்தார்.

## திருகோணமலேயில் கத்தோலிக்க மக்கள் பிரார்த்தனே

எதிர்வரும் 28-8-76 சனிக்கிழமை திருகோணமலே மரியன்னே பேராலய முன்றலில் திருமலே வட்டாரப்பெரிய குருக்கள் அருட்திரு வம்பேக் அடிகளார் தலேமையில் துணேக்குருக்கள் சந்திரா பெர்ணண்டோ, ஜோசப் [illegible] அடிகளார் ஆகியோர் சகிதம் திருகோணமலே கத்தோலிக்க மக்கள் தமிழினத்துக்காக உண்ணுவிரதமிருந்து பிரார்த்தனேயிலீடுபடுவார்கள். காலே 7மணி முதல் மாலே 7மணிவரை நடைபெறும் இந்த உண்ணுவிரதத்தின் போது கூட்டுப் பிரார்த்தனேயும் இடம் பெறும். அ. எழுதுவினேஞர் சங்க உறுப்பினர்களுட்பட, கிறிஸ்தவரல்லாதோரும் இதில் பங்கு பற்றுகிருர்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org